# The Devotional Path of Kulasekara Azhwar in the Vaishnava Tradition

**V. Praveena**
*Ph.D., Research Scholar (Part Time), P.G. & Research Department of Arignar Anna Government Arts College, Cheyyar*

**Dr. K. Venkatesan**
*Associate Professor, P.G. & Research Department of Arignar Anna Government Arts College, Cheyyar*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI: https://doi.org/10.5281/zenodo.18981519

**Abstract**
*Bhakti literature flourished extensively during the Pallava period. No other language has seen the emergence of devotional literature to the extent that it did in Tamil. Following Sangam literature and epics, devotional literature holds the distinction of enriching the Tamil language. Bhakti literature refines the human mind. The period from 600 - 900 till has been defined as the Bhakti movement period. Although caste discrimination prevailed in the Tamil society of that time, the Bhakti movement championed the principle that 'all devotees of God are worthy of worship'. The Jain doctrine held that the consequences of one's actions, which relentlessly pursue and torment the doer, must be experienced to be expiated. In contrast, the Saiva and Vaishnava religions stated that God is the one who controls karma and its consequences. They attracted people by proclaiming that if we surrender to His feet; all the bonds of karma will be loosened and destroyed. K. Kailasapathy cites this as the primary reason for the Bhakti movement gaining influence as a people's movement.*

***Keywords:*** *Vaishnavam, Kulasekara Azhwar, Path of Devotion, Perumal Thirumozhi, Tirupati Resident, Kulasekara Azhwar's Devotion to Rama*

**References**

1. Dr. S. Subhash Chandra Bose, History of Tamil Literature, Pavai Publications, Chennai – 600 014.
2. Sri Nalayirath Divya Prabandham (Muthalaiiram), Kulasekara Azhwar Perumal Thirumozhi, Gangai Bookstore, 23, Deena Dayalu Street, Chennai – 600 017.
3. Dr. P. Guruchandar, Kulasekara Azhwar's Thirumal Bhakti, Dharani Bharathi Press, 8/78, Sami Street, Ayodhyapattanam, Salem – 636 103.
4. M. Raghavaiyangar, The History of Azhwars, Saradha Press, Chennai – 600 014.
5. C.S. Devanathan, The Twelve Azhwars Who Developed Vaishnavism Assistant Professor, Tamil Department, A.A.A. College of Arts, Cheyyar – 604 407.
6. M. Ramasamy, Kambanum Sadayanam, Rasipuram – 637 408.
7. A.S. Gnanasambandhan, Kambaramayanam Ramavatharam, Yuddhakandam – 1, Chief Editor, Kamban Aranila.

# வைணவ மரபில் குலசேகர ஆழ்வாரின் பக்திநெறி

***வே. பிரவீனா***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***முனைவர் க. வெங்கடேசன்***
இணைப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*பக்தி இலக்கியம் பெருமளவில் தோன்றியது பல்லவர்கள் காலத்தில்தான். வேறு எம்மொழியிலும் தமிழில் தோன்றிய அளவு பக்தி இலக்கியம் தோன்றவில்லை. சங்க இலக்கியங்கள், காப்பியங்களுக்கு அடுத்துத் தமிழுக்குச் செழுமை சேர்த்த பெருமையுடையது பக்தி இலக்கியங்கள். பக்தி இலக்கியம் மனித மனத்தைப் பண்படுத்துகிறது. கி.பி.௬00 முதல் ௯00 வரையிலான காலம் பக்தி இயக்கக்காலம் என வரையறுத்துள்ளனர். அன்றைய தமிழ்ச் சமூகத்தில் சாதி வேற்றுமை நிலவிய போதிலும் “இறையடியார் யாவரும் வணங்கத் தக்கவரே” என்னும் கொள்கையினைப் பக்தி இயக்கம் முன்னிறுத்தியது.*
*வினை செய்தவனை விடாது வந்து துன்புறுத்தும் வினைப்பயனை நுகர்ந்தேதான் கழிக்க வேண்டும் என்பது சமணர் கொள்கை. இதற்கு மாறாகச் சைவ, வைணவ சமயங்கள். வினைக்கும் வினையாக உள்ளவன் இறைவன். நாம் அவனது கால்களைக் கட்ட வினைக்கட்டுகள் யாவும் அவிழ்ந்து ஓழியும் என்று கூறி மக்களைத் தம்மிடத்தே ஈர்த்தன. பக்தி இயக்கம் மக்கள் இயக்கமாகச் செல்வாக்குப் பெற்றதற்கு இதனையே முதற்காரணமாகக் காட்டுகிறார் க.கைலாபதி.*
***திறவுச் சொற்கள்:*** *வைணவம், குலசேகர ஆழ்வார், பக்திநெறி, பெருமாள் திருமொழி, திருப்பதிவாசன், குலசேகர ஆழ்வாரின் இராம பக்தி*

**வைணவம்**

வைணவ சமயம் திருமாலை முழு முதற்கடவுளாக வழிபடும் சமயம். வைணவம் என்று அழைக்கப்படும் இச்சமயம் இந்து சமயத்தின் ஆறு உட்பிரிவுகளுள் ஒன்றாகும். உலகில் தீமைகள் ஓங்கும்போது காக்கும் கடவுளான விஷ்ணு மனித வடிவில் அவதாரம் எடுத்து, அவற்றை அழித்து நல்லவரைக் காப்பார் என்பது வைணவர் நம்பிக்கை. வைணவ கடவுளான விஷ்ணு எண்ணற்ற அவதாரங்கள் எடுத்துள்ளதாகவும் நம்புகிறார்கள்.

உலக உயிர்கள் எல்லாவற்றையும் காக்கும் தொழிலைத் திருமால் செய்கின்றார் எனக் கூறுகிறது வைணவம். இறைவனிடம் “நீயே சரணம்” என்று அடைக்கலம் கொண்டால் எல்லா துன்பங்களிலிருந்தும் விடுபடலாம் என்று கூறுகிறது வைணவம். இந்திரலோகத்தை ஆளும் பேற்றைவிடத் திருமாலின் இணையடிகளைத் தொழும் பேரே உயர்ந்தது என்கிறார்கள் ஆழ்வார்கள்.

**பச்சை மா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே**

என்பது தொண்டரடிப் பொடியாழ்வாரின் கூற்றாகும். வைணவக் கடவுளான திருமால் வழிபாடு ஆதிகாலத்திலிருந்தே இருந்து வந்துள்ளதைத் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதன் வழி உணரலாம்.

**"மாயோன் மேய காடுறை உலகம்"**

என்கிறது. வைணவத்தை வாழ்விக்க வாழ்ந்த சான்றோர்களை ஆழ்வார்கள் என்றும் ஆச்சாரியர்கள் என்றும் கூறுவர். திருமாலின் குணங்களில் ஈடுபட்டு ஆழ்ந்தவர்களை ஆழ்வார்கள் என்று அழைத்தனர். இவர்கள் பன்னிருவர்கள் ஆவர். பன்னிருவர்களில் குலசேகர ஆழ்வார் பற்றியும் அவரின் பக்திநெறி பற்றியும் காணலாம்.

## குலசேகர ஆழ்வார் பக்தியுணர்வு

இயற்கை வளமிக்க சேர நாட்டில் வஞ்சிக் களம் நகரை ஆண்ட திடவிரதன் என்னும் திருமால் அடியார்க்கு மகனாகப் பிறந்தார். குலசேகர ஆழ்வார் இளமையிலேயே பல்வித கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். எனவே, திடவிரதன் குலசேகர ஆழ்வார்க்கு முடிசூட்டி மகிழ்ந்தார். நால்வகைப் படையோடு எதிரிகளும் வியக்கும் வகையில் நல்லாட்சி புரிந்து வரும் வேளையில் திருமாலின் பெருமைகளை அறிகிறார். திருவரங்கம் சென்று திருவரங்கனைக் காண ஏங்குவதாகக் கூறுகிறார்.

உலகில் தருமங்கள் தழைக்கவும் நீதிநெறி வாழவும் இறைவன் அவதாரம் எடுத்து மண்ணுலகில் தோன்றினார். யானையைக் கொண்டே, யானையைப் பிடிப்பதைப் போல மனிதர்களைக் கொண்டே மனிதரைத் திருத்த எண்ணி கடவுள் பல அவதாரங்களை எடுத்து மக்களைக் காத்தார். குலசேகர ஆழ்வார் தன் பாசுரங்களில் பல உண்மைகள் வாயிலாகத் தனக்கும் திருமாலுக்கும் உள்ள உறவு பற்றி வாழ்வியலுடன் இணைத்துப் பக்திச் சுவையுடன் விளக்கியுள்ளார்.

## திருமாலைத் தாயாகவும் தன்னைக் குழந்தையாகவும் பாவித்து கொள்ளுதல்

இறைவனைத் தாயாகவும் தன்னைக் குழந்தையாகவும் பாவித்து குலசேகர ஆழ்வார் பாடுகிறார்.

**அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும்**
**மற்று அவள்தன்**

கோபத்தால் தன்னைத் தாய் அகற்றி விட்டாள் என்று இனி அவளிடம் நால் செல்லக்கூடாது என்று குழந்தை எண்ணாமல் தாயின் அன்பினை நினைத்து அவளையே நெருங்குகிறது. அது போல, சோலை சூழ்ந்த வித்துவக்கோடு என்னும் புண்ணிய தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலே! நீ தந்த துன்பத்தை நீயே போக்கவில்லை என்றாலும், உன் சரண் அல்லாது, வேறு சரண் இல்லை என்கிறார் குலசேகர ஆழ்வார். அது போல,

**அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!**
**அன்பினில் விளைந்த ஆரமுதே!**

மாணிக்கவாசகரின் இப்பாடல் இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் போற்றி அவர் பொய்யான உலக வாழ்வில் வீணாகக் கழித்த நேரத்தை நினைத்து வருந்தி, சிவபெருமானின் நிகரற்ற கருணையையும் அன்பின் அமுதாகவும் விளங்கும்அவனதுதிருவடியைப்பற்றிக்கொள்வதை விரும்புகிறார்.

அதுபோல ஆண்டாள் நாச்சியார் தனது பாசுரங்களில்திருமாலைநாயகனாகவும்தன்னை நாயகியாகவும் பாவித்துக் கொள்கிறார்.

**மத்தளம் கொட்டவரி சங்கம் நின்றூத**
**முத்துடைத் தாம நிரை தாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீநான்**

நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கண்ணனைத் தன் தலைவனாய் மனதில் வரைந்து உருகிய இறைநிலைக் காதலே பாடுபொருளாகத் திருமாலை நினைத்துப் பாடுகிறாள்.

## குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழி

குலசேகர ஆழ்வார் பாடிய பாசுரத் தொகுப்பின் பெயர் பெருமாள் திருமொழி ஆகும். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாவது ஆயிரத்தில் இந்நூல் உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. குலசேகரஆழ்வார்இராமஅவதாரத்தில்பெரிதும் ஈடுபாடு உடையவர். வித்துவக்கோடு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைக் குறித்து இவர் பாடும் பாடல்கள் பக்திச்சுவை மிக்கன. குலசேகர ஆழ்வார் திருவஞ்சைக் களத்தில் சேர மரபில் பிறந்தவர் செல்வத்தையோ. மனிதப் பிறாவியையோ இவர் பொருட்படுத்தவில்லை. திருப்பதி மலையில் ஒரு சிகரமாகவும், மீனாக, காட்டாறாக, பாதைகளாக, படியாக இருக்கவேண்டும்

என்ற ஆவலைத் தன் பாசுரங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு பதிகத்தில் இராமாயணக் கதைச் சுருக்கத்தைப் பாடியுள்ளார். பெரியாழ்வார் தனது பாசுரங்களில் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடல்களை எழுதியுள்ளார்.

**பேணி உனக்குப் பிரமன் வீடு தந்தான்**
**மாணிக் குறளனே! தாலேலோ**
**வையம் அளந்தானே தாலேலோ**

அதுபோல, குலசேகர ஆழ்வாரும் தனது பாசுரங்களில் இராமனைக் குழந்தையாக பாவித்துப் பாடல்களைப் பாடியுள்ளார்.

**காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே**
**ஆலிநகர்க் கதிபதியே அயோத்தியனே தாலேலோ**

குலசேகர ஆழ்வாரின் பக்தி நெறியின் உச்சம் அவருடைய பெருமாள் திருமொழியில் வெளிப்படுகின்றது.

மக்களினம் தோன்றியது அரிதான ஒன்றாகும். இச்சூழலில் மக்கள் மக்களாக வாழவில்லை. அதனாலே விலங்கொடு ஒப்புமைப்படுத்தினார் வள்ளுவர். மனித இனம் மகத்தான பிறவி இருப்பினும், அவரவர்களின் மனநிலைகள் பொறாமை, ஆசை, வஞ்சகம் போன்ற இழிவான செயல்களைச் செய்வது மனித இனமே எனலாம்.

**அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது**
**அதனினும் கூன் குருடு செவிடு இன்றி பிறத்தல் அரிது**

என்று மனித இனத்தை ஔவையார் பாராட்டியுள்ளார். பிறவிப் பெருங்கடலை இறைவனின் திருவடிகளைப் புனையாகக் கொண்டு கடக்கலாம் என்றார் வள்ளுவர். இதனை,

**அறவாழி அந்தணன் தான் சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

என்று கூறுகிறார். எப்பிறப்பாயினும் அன்போடு ஏற்படும் குலசேகரர் திருவேங்கட மலையில் பிறப்பதையே அவரின் ஆவல். அம்மலையில் பிறத்தலுக்குரிய வேட்கையை வெளிப்படுத்துவதாக, “திருவேங்கட மலை தொடர்பு வேண்டல்” என்றார்.

## அடியார்களைப் போற்றுதல்

குலசேகர ஆழ்வார் அரச குலத்தில் பிறந்தவராயினும் திருமாலடியார்களின் பெருமை உணர்ந்தவராக அவர்களைப் போற்றிப் பாடும் வகையில் பெருமாள் திருமொழியில் இரண்டாம் திருமொழி அமைந்துள்ளது எனலாம். அரங்கனைப் பாடிப் பரவும் அடியார்களைக் காண்பதே பாக்கியத்திலும் பாக்கியம் என்றும் அடியார்கள் அரங்கனின் பெருமைகளைப் பாடி ஆடிய பாதத் துகள்களில் புரள்வதே பாக்கியம் என்றும் அது கங்கையில் குளிப்பதைவிட புனிதமானது என்றும் குலசேகர ஆழ்வார் பாடுகின்றார். மேலும்,

**மாலையுற்ற கடல் கிடந்தவன் வண்டுகிண்டு நறுந்துழாய்**
**மாலையுற்ற வரைப்பெருந்திரு மார்வனை மலர்க்கண்ணனை**

என்று பாடுவதன் மூலம் திருமாலை வழிபடும் அடியவர்களான பாகவதர்களைப் போற்றுதலைக் குறித்து விளக்குகிறது. தொண்டரடிப்பொடியாழ்வாரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

**பச்சை மாமலைபோல் மேனிப் பவளவாய்க் கமலச்செங்கண்**
**அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே**

திருமால் அடியவரது திருவடி தூசி என்று தன்னைக் கருதிக்கொண்ட தொண்டரடிப் பொடியாழ்வாரது பாடல்களில் திருமாலின் மீது கொண்ட பக்தி வெளிப்படுகிறது. திருமாலின் மேனி அழகில் மனத்தைப் பறிகொடுத்த தன்மை புலப்படுகிறது என்று இறைவனைத் தரிசித்து வாழும் வாழ்வே தேவை என்கிறார்.

## இறைவனை மருத்துவனாக்கல்

மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன நோய்கள். உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் நோய்கள் என்றே நம் முன்னோர்கள் குறிப்பிட்டனர்.

**வாளால் அறுத்துச் சுடினும் மருந்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**

என்கிறார். குலசேகர ஆழ்வார் மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து, நோயாளி அவரை நேசிப்பார். வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அது போன்று நீ! உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை

எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் என்கிறார்.

**பித்தனாய் போற்றுதல்**

மனிதனின் பரிணாம வளர்ச்சியில் கிடைப்பதற்கரிய எப்பொருளைக் கண்டாலும் அதனை அடைய முற்படுவர். சில காரணங்களால் அவை கிடைக்காமல் போனால், அதன் ஞாபகமாகவே பித்துப் பிடிப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். அதில் பணம், மண், பொருள், பெண் போன்ற ஆசை காரணமாகவே அமைகின்றன. பரம்பொருளைப் பெறுவதற்கு அதன் புகழ் பற்றியே பாடியவைதாம் பக்தி பாசுரங்கள் ஆகும்.

காரைக்கால் அம்மை தன்னையும் தன் இளமையையும் பயன்படாமல் போவதை நினைத்து சிவன்பால் பேய் பிடித்தார் போலப் பாடி பரவசமுற்றதை அறியலாம்.

**.. காரைக் காற் பேய்**
**செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்**
**சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே**

அத்தகைய ஞானிகளைத்தான் மனிதனுக்கு அப்பாற்பட்டுத் தெய்வமாகப் போற்றுகின்றனர். குலசேகரரும் பொருள், போகம் மீது பற்றில்லாமல் ஐந்து ஆசைகளையும் வெறுத்து மண், பொன், பெண்ணாசைகளை வெறுத்து இறைவன்பால் தன்னையே அர்பணிக்கிறார்.

**எத்திறத்திலும் யாரொடும் கூடும் அச்**
**சித்தர் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்**

என்னைப் போல் அடியவர்களாக இல்லாத மக்களிடத்தில் நான் சேரமாட்டேன். விண்ணக வாழ்வையும் வேண்டேன். அமரருக்குத் தலைவன் அரங்கநாதனிடம் ஏழு பிறவியிலும் பித்தனாய் இருப்பேன் என்கிறார். அதுபோல மாணிக்கவாசகரும் தனது திருமுறையில்,

**பித்தா பிறைசூட பெருமானே அருளாளோ**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை**

பித்தேறியவரே! பிறையைச் சூடுபவரே! பெருமானே! அருள்நிறைந்தவரே! என்பதாகும். இது இறைவனின் பேரன்பையும் தன்னை அடிமை கொண்ட பெருமானின் பெருமையையும் போற்றுகிறது. குறிப்பாக.. பித்தா! என்ற சொல் இறைவனின் அன்பால் பைத்தியமானவன் என்ற நிலையை உணர்த்துகிறது.

**திருப்பதிவாசன்**

தொல்காப்பியத்தில் வகுத்த எல்லைப்படி திருவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம் ஆகும். இத்தலத்திற்குப் பல்வேறு பெயர்கள் சூட்டப்படுகின்றனர். திரு என்பது அழகு என்றும் பதி என்பது கடவுள் என்றும் பலவாறு கூறுகின்றனர். இத்தலத்தில் திருமால் நின்ற கோலத்தில் காட்சிதருகிறார். நாட்டு மக்கள் அத்தலத்திற்குச் சென்று நன்மை பெற்றதாக மக்களினம் பேசும் புகழ் வாய்ந்த தலமாகத் திருவேங்கடம் அமைகிறது. சிறப்புமிக்க அத்தலத்தில் யாதேனும் ஒரு பொருளாய் தோன்றி புகழ்பெற பாடுகிறார் குலசேகரர். தமிழ்க் கவிஞராகிய கண்ணதாசன் அப்புகழ் மிக்கத் தலத்தைத் தனது பாடலால் படைத்துள்ளதை அறியலாம்.

**திருப்பதி சென்று திரும்பி வந்தால்**
**திருப்பம் ஆகுமடா**

என்கிறார். அத்தகைய சிறப்பு வாய்ந்த வேங்கடமலையின் சிறப்பையும் இறைவனின் பெருமைகளையும் அறியலாம். திருப்பதி மலை மீது மீனாகவும் வண்டாகவும் குருகுப் பறவையாகவும் நடந்து செல்லும்படியாகவும் விளங்க வேண்டுமென்று நெஞ்சுருகப் பாடும் அவர்,

**எம்பெருமான்**
**பொன்மலையில் ஏதேனும்**
**ஆவேனே**

என்று கூறுகிறார்.

**குலசேகராழ்வாரின் இராம பக்தி**

குலசேகர ஆழ்வார் திருமாலிடம் பேரன்பு கொண்டவர். உலக மக்கள் ஆன்மீகம் மேன்மையுற வேதங்களையும் புராணங்களையும் சாத்திரங்களையும் தோற்றுவித்தனர். மேலும் நாராயணன் தாமே மச்சமாகவும் ஆமையாகவும் வராகமாகவும் நரசிம்மமாகவும் வாமனனாகவும் பரசுராமனாகவும் இராமனாகவும் பலராமனாகவும் கண்ணனாகவும் அவதாரம் செய்து மக்களை மாண்புறச் செய்தார்.

ஆழ்வார்களில் அரசனாகிய குலசேகரனின் சிறப்பைச் சிலைசேர் நுதலியர் வேள் சேரலர்கோன் எங்கள்குலசேகரன்" என்று உடையவர் புகழ்வதை அறியலாம். இவர் அரசாட்சி செய்தாலும் உள்ளத்தில் திருவரங்கனையே நினைத்து உருகியவர். இவர் திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னித் திரைக்கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமாத்தைக் கண்டு கொண்டு என் கண்ணிமைகள் என்று கொல்லோ களிக்கும் நாளே என்று பாடுகிறார்.

இத்தகைய சிறப்புப்பெற்ற குலசேகரரைத் "திருநாளைப் போவார்" என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரம் கூறுவது அறியலாம். இப்பெருமானார் இராமாயணக் கதையைக் காதால் கேட்டும் நாடகமாக அமைத்துக் கண்ணால் கண்டும் மகிழ்வு பெற்றார். அதனை,

**எம்பெருமான் தன் சரிதை செவியால்**
**கண்ணால் பருகுவோம் இன்னமுதை மதியோம்**

என்று உலகறியக் கூறுவதை அறியலாம். கம்பனைப்போல் காப்பியத்தை இப்பெருமகனார் பேரவையில் இராம கதையைக் கூறுவார்கள். அது கேட்ட ஆழ்வார் அந்தந்த இடங்களுக்கேற்ப உணர்ச்சி பெறுவார் என்று குரு பரம்பரை கதை கூறுகிறது.

### குலசேகராழ்வார் காட்டும் தாலாட்டு

பிள்ளைகளைத் தாலாட்டு பாடி கண் வளர வைப்பது மரபு. அதனைத் துணையாகக் கொண்டு தன் மகனைத் தாலாட்டும் தாயாகவும் இராமனைப் பாடியுள்ளார். அவரது எட்டாம் பதிகத்தில் உள்ள பாசுரங்கள் இராமபிரானுக்குத் தாயான கோசலை பாடும் தாலாட்டாகப் பாடுகிறார்.

**.. என் கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ**

என்று இராமபிரானின் வீரத்தையும் நீதி நெறிகளையும் தாலாட்டாகப் பாடி மகிழ்வதை அறியலாம். அதுபோல பெரியாழ்வாரும் தனது பாடல்களின் மூலம் கண்ணனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அவன்மீது கொண்ட பக்தி நெறியால்,

**மாணிக்கம் கட்டி வயிரம் இடைக்கட்டி**
**ஆணிப் பொன்னால் செய்த வண்ண சிறுதொட்டில்**

என்று தாலாட்டுகிறார். நம்மாழ்வாரும் பிள்ளையின் தனிச் சிறப்பாகக் கண்ணனைச் சிறு குழந்தையாகப் பாவித்துப் பாடுகிறார். பிள்ளைச் செல்வம் மக்கள் சேர்க்கும் செல்வங்களில் முதலிடம் பெறுகிறது.

**வேத ஒலியும் விழா ஒலியும்**
**பிள்ளைக் குழா விளையாடு ஒலியுமாறா**

என்று பாராட்டுவதால் பக்தியின்மேல் கொண்டு பாடியுள்ள பாங்கினை அறியலாம். அதனைத்தான் தெய்வப்புலவர் "குழல் இனிது, யாழ் இனிது என்னும் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்கிறார். அறிவுடைநம்பி என்னும் அரசன் குழந்தைச் செல்வத்தை,

**படைப்புப் பல படைத்து பலரோடு உண்ணும்**
**உடைப்படு செல்வராயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**

என்று பாடியுள்ளதை அறியலாம்.

காலந்தோறும் தமிழ் இலக்கியம் புதிய புதிய கருத்துக்களைத் தமிழ் சமுதாயத்திற்கு வழங்கி வந்துள்ளது. அவ்வகையில் கி.பி.6ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய பக்தி இயக்கம் தமிழக மக்களை வழி நடத்தியது எனலாம். நாயன்மார்கள் சைவ, சமயத்தோடு சைவ இலக்கியங்களை வளர்த்தது போன்று ஆழ்வார்கள் வைணவ இலக்கியங்களை வளர்த்தனர் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் காணலாகும். நாலாயிரம் பாடல்கள் நான்கு வேதத்தின் சாரம்சமாகும் என்று கூறுவர். குலசேகர ஆழ்வாரின் பக்திப் பாடல்கள் திருமாலின் பெருமையையும் அடியார்களின் பக்திநெறியை விளக்கும் வகையில் அமைந்துள்ளது எனலாம்.

குலசேகர ஆழ்வாரின் பக்திநெறி மன்னனுக்கும் மகாவிஷ்ணுவுக்கும் உள்ள உறவை "நான்" என்னும் அகந்தையை நீக்கி "நாம்" என்ற பக்திப் பிணைப்பாக மாற்றியது. அரச சுகங்களைத் துறந்து இறைவனின் அடியார் கூட்டத்தில் ஒருவராக வேண்டும் என்ற அவரது தணியாத தாகம், பக்தி இயக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. முனைவர் சு.சுபாஷ் சந்திரபோஸ், தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
2. ஸ்ரீ நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் (முதலாயிரம்), குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழி, கங்கை புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, சென்னை.
3. முனைவர் பி.குருசந்தர், குலசேகர ஆழ்வாரின் திருமால் பக்தி, தாரணி பாரதி பதிப்பகம், 8/78, சாமி தெரு, அயோத்தியாப் பட்டணம், சேலம்.
4. மு.இராகவையங்கார், ஆழ்வார்கள் காலநிலை, சாரதா பதிப்பகம், சென்னை.
5. சி.எஸ்.தேவநாதன், வைணவம் வளர்த்த பன்னிரு ஆழ்வார்கள்